2nd April 1958]

SRI V. SUBBIAH : எஸ். எஸ். எல். ஸி. படித்திருக்கும் நபர்களேயே அம்பர் சர்க்காப் பயிற்சிக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற விதி இருக்கிறது. அகில இந்திய சர்க்கா சேவாசங்கத்திலும் கிராம சேவா சங்கங்களிலும் பயிற்சி பெற்ற ஊழியர்களுக்கு இந்த விதியிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறதா ? அப்படி விலக்களிக்கப்பட்டு, இவர்கள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அவர்களுக்கு விதி விலக்கு அளிக்கப்படுகிறதா என்ற தகவல் என்னிடம் இப்போது இல்லே.

SRI T. S. RAMASWAMY PILLAI : அகஸ்தீசுவரம் ப்ளாக்கி லுள்ள பரிஸ்ரமாலயங்களில் சேருவதற்கு ஹரிஜனங்கள் முன்வரவில்லே என்று கனம் மந்திரி கூறினர். ஹரிஜனங்கள் அங்கே மனுச் செய் திருந்த போதிலும், அவர்கள் எடுத்துக் கொள்ளப்படவில்லே என்ற புகார் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா ? அப்படிப் புகார் வந்திருந்தால் அதன் பேரில் அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மனுச் செய்து கொண்டிருந்தபோதிலும் எடுக்கப்படவில்லே என்ருல், மனுதாரர்கள் போதிய தகுதியில்லாதவர்களாக இருந்திருக்கலாம். ஆனுல், ஹரிஜனங் களே அதிகமாக எடுத்துக்கொள்ளவேண்டும் என்பதுதான் நோக்கமாக இருக்கிறது.

SRI P. S. SANTHANAM : இந்தப் பயிற்சியைப் பெறுவதற்கு திறமை ஏதாவது வேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKATVATSALAM : திறமையைவிட அக்கறையும் நம்பிக்கையும்தான் வேண்டும்.

Minor irrigation schemes

* 525 *Q*.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of minor irrigation schemes taken up in 1957–58 in the Coimbatore district; and

(*b*) the amount allotted for them?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Four schemes.

(*b*) Rs. 58,000.

SRI N. K. PALANISAMI : " புட் ப்ரொடக்ஷன் கமிட்டி " மூன்று வருஷங்களுக்கு முன்பு அங்கே வந்து எல்லாவற்றையும் நேரில் பார்த்த பிறகு பல ,பாசனத் திட்டங்களே அது சர்க்காருக்கு சிபாரிசு செய் திருந்தபோதிலும், அவைகளில் ஒன்றுகூட சர்க்காரால் எடுத்துக்கொள்ளப் படவில்லே. இதற்குக் காரணம் என்ன ? இத்திட்டங்களே எடுத்துக்கொள் வதற்காக இந்த இலாகாவிற்கு அதிகப்படியான பணத்தைக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எந்த எந்தத் திட்டங்களே எடுத்துக்கொள்ள முடியுமோ அவைகளேத்தான் சர்க்கார் எடுத்துக்கொள்ள முடியும். இப்போது Restoration of Orakkarai Venkatarama Chettiyar tank in Tekkampatti village, improvements to Kalapattu tank, providing irrigation facilities for the lands situated on the left side of Aliyar river and restoration of Kannampalayam tank. ஆகிய நான்கு திட்டங்களிலும் சர்க்கார் கவனம் செலுத்திவருகிறது.

[2nd April 1958

Sri V. K. RAMASWAMY MUDALIYAR : May I know from the Hon. Minister whether these minor irrigation works were executed or are being executed either by the Minor Irrigation Department or by the Food Production Department?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : Sir, according to the magnitude of the schemes, these are executed either by the Food Department over which the Superintending Engineer supervises or by the Public Works Department.

Sri N. MARUDACHALAM : சென்ற ஆண்டு சிறு நீர்ப்பாசனத் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட பணத் தொகை முழுவதும் செலவழிக்கப் பட்டதா ? மீதி இருந்தால் அது இந்தத் தொகையுடன் சேர்த்துக்கொள்ளப் படுமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 58,000 என்று சொன்னேன். இந்தத் திட்டங்களுக்கு இன்னும் அதிகப் பணம் செலவாகும்.

Sri V. K. RAMASWAMY MUDALIYAR : Sir, is there any proposal to hand over those minor irrigation works to the Food Department in view of the fact that the Minor Irrigation Department people are not pushing through them as expeditiously as they should?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : Sir, if the hon. Member means the minor irrigation works which are now being attended to by the Revenue Department, I am sure there is no such proposal at present.

Korukkai Scheme

* 526 *Q.*—Sri A. VEDARATHNAM : Will the Hon. the Minister for Home be pleased to state the stage at which the Tiruthuraipoondi taluk Korukkai Scheme stands?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : Apparently the member refers to the proposal for the opening of a livestock farm in Korukkai in Tiruthuraipoondi taluk. The Scheme has been deferred for the present in view of financial stringency.

Sri A. VEDARATHNAM PILLAI : பிரசித்திபெற்ற உம்பளச்சேரி, மாடுகளின் பிறப்பிடம் என்பது அரசாங்கத்திற்குத் தெரியும். சமீபத்தில் சென்னையில் நடந்த கண்காட்சியில்கூட உம்பளச்சேரி மாடுகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. அங்கே கால்நடைப் பண்ணைக்காக 600 எக்கர் நிலம் இருக்கிறது. நிலச்சுவாந்தார்களே இந்தக் காரியத்திற்காக நிலம் கொடுத் திருப்பது அரசாங்கத்திற்குத் தெரியும். அங்கே அவசியமான சர்வே யெல்லாம் எடுக்கப்பட்டு விட்டது. கால்நடைப் பண்ணையை ஆரம்பிப்பதற் காக மத்திய சர்க்கார்கூட நிதி கொடுத்திருப்பதாக அறிகிறேன். இந்தக் காரணங்களினால், இந்த யோசனையை மறு பரிசீலனை செய்து அங்கே கால் நடைப்பண்ணையை ஆரம்பிக்க சர்க்கார் முன்வருமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இது சம்பந்தமாக கால்நடை இலாகா டைரெக்டர் ஒரு திட்டம் தயாரித்து சர்க்காருக்கு அனுப்பி யிருந்தார். அத்திட்டம் அதிகச் செலவானது என்று சர்க்கார் கருதியதால், குறைந்த செலவுடைய திட்டத்தைத் தயாரித்து அனுப்பும்படி அவரை சர்க்கார் கேட்டுக் கொண்டது. அதற்குப் பிறகு குறைந்த செலவுள்ள